

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம்.முருகன், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறையில் நலத்திட்ட உதவிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

நெடுஞ்சாலைத் துறை சார்பில், மாப்படுகை – கடலங்குடி சாலையில் பழவாற்றின் குறுக்கே 7 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் பாலம்;

என மொத்தம், 48 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் 47 முடிவுற்றப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப் பட்ட பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், தரங்கம்பாடி பேரூராட்சியில் 1 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அறிவு சார் மையம், குத்தாலம் பேரூராட்சியில் 2 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலங்குகள் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் மற்றும் தார்சாலைப் பணிகள், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்சாலைப் பணிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், பொறையாறில் உள்ள அரசு மருத்துவ மனையில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம், சித்தர்க்காட்டில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு நோய் தடுப்பு மருந்து கிடங்கு;

நீர்வளத் துறை சார்பில், சீர்காழி வட்டம், தென்னாம்பட்டினத்தில் உள்ள பெருந்தோட்டம் ஏரியின் உபரி வாய்க்காலில் கடல்நீர் உட்புகுவதை தடுக்கின்ற வகையில் 12 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெருந்தோட்டம் கிராமத்தில் செல்லனாற்றில் கடல் நீர் உட்புகுவதை தடுக்கின்ற வகையில் 31 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தரங்கம்பாடி வட்டம், சந்திரபாடி கிராமத்தில் நண்டலாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுவதை தடுக்கின்ற வகையில் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ள கடைமடை நீரொழுங்கிகள்;

குத்தாலம் வட்டம், கடலங்குடி கிராமத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே வாணாதிராஜபுரம் மற்றும் அரையபுரம் வாய்க்காலில் நீர் செல்லும் திறனை மீட்டெடுக்க 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய படுக்கை அணை;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மயிலாடுதுறை நகராட்சியில் 7 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், மயிலாடுதுறை வட்டம், சீனிவாசபுரத்தில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மண் பரிசோதனை நிலையம்;

என மொத்தம், 113 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 3000 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள், 117 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை மற்றும் இயற்கை மரணம் உதவித் தொகை; **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 7000 பயனாளிகளுக்கு** கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள், வீடுகளை சீரமைக்க நிதியுதவி, முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் நிதி உதவிகள்; **மகளிர் திட்டத்தின் சார்பில், 12,086 பயனாளிகளுக்கு** சுயஉதவிக் குழு வங்கி நேரடி கடன், நலிவு நிலை குறைப்பு நிதி, சமுதாய முதலீட்டு நிதி, சுழற்சி முறை கடன்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 25,669 பயனாளிகளுக்கு குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம், இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் திட்டம், வேளாண்மை இயந்திரமாக்கல் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள்; **தாட்கோ சார்பில், 124 பயனாளிகளுக்கு** முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் நான்கு சக்கர வாகனங்கள், கறவை மாடுகள் வாங்கிட மானியத்துடன் கடனுதவி, நன்நிலம் மகளிர் நில உடமை திட்டத்தில் இரண்டு ஏக்கர் நிலம், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், 167 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பேட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், மடக்கு சக்கர நாற்காலிகள், ஸ்மார்ட் போன்கள், காதொலி கருவிகள், செயற்கை கால்கள், மருத்துவ காப்பீடு அட்டைகள்; **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில்**, 5 கர்ப்பிணிகளுக்கு ஊட்டச் சத்து பெட்டகங்கள்; **தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், 654 பயனாளிகளுக்கு** திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, இயற்கை மரண நிதியுதவித் தொகை, ஓய்வூதியம், பணியிட மரண உதவித் தொகை, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நல வாரிய அட்டைகள்;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 2500 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் பொருட்டு நுண்கடன் வழங்குதல், **பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை சார்பில், 202 பயனாளிகளுக்கு** சலவைப் பெட்டி, தையல் இயந்திரங்கள், முஸ்லீம் மற்றும் கிறித்துவ மகளிருக்கு நலத்திட்ட உதவிகள், சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள்; **மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 1000 பயனாளிகளுக்கு** புதிய மின்னணு குடும்ப அட்டைகள்; **கூட்டுறவுத் துறை சார்பில், 1,242 பயனாளிகளுக்கு** பயிர்க்கடன், கால் நடை பராமரிப்பு, தாட்கோ கடன், மாற்றுத்திறனாளி கடன் உதவி, சிறுபான்மையினர் கடன் உதவி, டாம்கோ கடன், கரும்பு கடன்;

தோட்டக்கலைத் துறை சார்பில், 222 பயனாளிகளுக்கு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், கலைஞரின் அனைத்துகிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள்; **கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், 10 பயனாளிகளுக்கு** 50 சதவிகித மானியத்தில் மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள்; **சமூகநலத்துறை சார்பில், 49 பயனாளிகளுக்கு** இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவிகள்;

என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 271 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர்.சுதா, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், நிவேதா எம். முருகன், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் தாட்கோ தலைவர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் - சிதம்பரத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

கரூர் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

கரூர். ஜூலை.18 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்ததையடுத்து கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமை மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்," உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கரூர் மாநகராட்சி வாங்கப்பாளையத்தில் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமையில் முகாம் தொடங்கப்பட்டது. கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி, "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இவ்விழாவில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, பொது மக்களின் குறைகளை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே, அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் வந்து கேட்டறிந்து தீர்வு காணும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி உள்ளிட்ட பகுதிகளில் 179 இடங்களில் செப்டம்பர் மாதம் வரை நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் 101 முகாம்களும். நகர்புற பகுதிகளில் 78 முகாம்களும் நடத்தப்படுகிறது. இந்த முகாம்கள் மூலம் நகர்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சேர்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத்துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின், தங்கள் பகுதிகளில் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப்பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் 'உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தில் 519 தன்னார்வலர்கள் நிய மிக்கப்பட்டு வீடு வீடாக சென்று முகாம்கள் நடைபெறும் இடங்கள். துறைகள். உத்தரவுகள் மற்றும் வேண்டிய ஆவணங்கள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன.

மாவட்டம் முழுவதும் அவரவர் வசிக்கும் பகுதிகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் மனுக்கள் அளிக்க வரும் பொது மக்கள் தங்களின் கோரிக்கை மனுக்களுடன் உரிய ஆவணங்களை இணைத்து அலுவலர்களிடம் சமர்பித்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கரூர் மாவட்டத்தில் பட்டா இன்றி வசித்து வரும் பொது மக்களுக்காக 28,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதில் 13,000 த்திற்கும் மேற்பட்ட பட்டாக்களை கரூர் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். கரூர் மாநகராட்சி பகுதிகளில் ரூ. 328 கோடி மதிப்பீட்டில் சாலை வசதி. சாக்கடை வசதி உள்ளிட்ட வளர்ச்சி திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டது. மேலும் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான ஒப்புதல்களும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்திற்கு ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாண்டிலேயே வேளாண்மைக் கல்லூரி, அரவக்குறிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டியில் அரசு கலைக் கல்லூரிக்கான புதிய கட்டடம் மற்றும் குளித்தலை அரசு மருத்துவமனைக்காக ரூ. 40 கோடி மதிப்பீட்டிலான புதிய கட்டடம் என 4 தொகுதிகளுக்கும் ஒரு சேர வளர்ச்சித் திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தினார்கள். மேலும் 250 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் அமைக்கும் பணி மற்றும் ஐ.டி பார்க் அமைக்கும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து கூட்டுறவுத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு தலா ரூ. 72,000 மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளும், இன்றைய முகாமில் மொத்தம் 24 பயனாளிகளுக்கு ரூ. 7:16 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை செந்தில் பாலாஜி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், மாநகராட்சி மேயர் வெ. கவிதா. மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா துணை மேயர் சரவணன். மண்டலக் குழு தலைவர்கள் வெங்கமேடு சக்திவேல், எஸ்.பி. கனகராஜ். க. அன்பரசன், ஆர்எஸ்.ராஜா, மாவட்ட மேலாளர் தாட்கோ சீ.முருகவேல், மாமன்ற உறுப்பினர் பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பழனிசாமியின் கேவலமான அரசியல்

கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

உங்களுடன் ஸ்டாலின், என்கிற மாபெரும் குறை தீர்ப்பு கூட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை அடுத்து, கரூர் மாவட்டத்தில் 179 இடங்களில் முகாம்கள் நடைபெற இருக்கின்றன. வருகின்ற அக்டோபர் மாதம் வரை நடைபெற இருப்பதால் நகர்ப்புறங்களில் 13 துறைகள் ஒன்றிணைந்து 43 சேவைகள், ஊரகப்பகுதிகளில் 15 துறைகள் ஒன்றிணைந்து 46 சேவைகளை வழங்கும் சிறப்பு முகாமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தில் விடுபட்ட மகளிர் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பங்களை கொடுத்து மாதம் ஆயிரம் ரூபாய் உரிமை தொகை பெறலாம். இதில் சிறப்பு என்னவென்றால் ஒட்டுமொத்தமாக மாவட்டம் முழுவதும் ஏறத்தாழ 519 தன்னார்வலர்கள் நிய மிக்கப்பட்டு வீடு வீடாக சென்று முகாம் நடைபெறும் இடம், என்னென்ன துறைகள், என்னென்ன உத்தரவுகளை பெற முடியும்?. என்னென்ன ஆவணங்களை கொடுக்க வேண்டும் என விளக்கமாக துண்டு பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. கரூர் மாவட்டத்தில் மக்களிடம் வரவேற்பை பெற்றிருக்கக் கூடிய ஒரு சிறப்பான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். 45 நாட்களுக்குள் மனுக்களுக்கு தீர்வு காணப்படும்

கரூர் புதிய பேருந்து நிலையத்தில் படிப்படியாக பேருந்துகள் இயக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரும், ஒரு அரசியல் கட்சியினுடைய தலைவரும், தேர்தல் சமயத்தில் நான் பேசியதை ஒரு சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும், தனிப்பட்ட முறையில் என் மீது விமர்சனங்களை வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கருத்து கூறியுள்ளனர். மாட்டு வண்டியில் மணல் எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்கள். நீதிமன்ற உத்தரவுபடி, மாவட்ட ஆட்சியர் கையெழுத்திட்டு அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்றுதான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அரசு பொறுப்பேற்ற பிறகு ஆட்சியர் கையெழுத்திட்டு அந்த பணிகளை தொடங்குவோம் என்று தான் கூறினேன். ஏதோ அதிமுக ஆட்சியில் எடுக்கப்பட்டது போல நேரடியாக ஆற்றுக்குள் ஜேசிபி இயந்திரங்களையும், லாரிகளைகளையும், விட்டு எடுத்ததைப்போல எடுக்க வேண்டும் என்பதல்ல. மட்டரகமான, கீழ்த்தரமான, மோசமான கேவலமான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்கிற வகையில் எதிர்க்கட்சித் தலைவரும் ஒரு அரசியல் கட்சி தலைவரும் கருத்துக்களை முன் வைத்திருக்கிறார்கள். இப்பொழுதும் சொல்கின்றேன். மாட்டு வண்டியில் மணல் எடுப்பது என்பது அவர்களது உரிமை. உள்ளூர் கட்டுமான பணிகளை பூர்த்தி செய்ய மணல் தேவை. ஊடகங்களும் எதை கொடுத்தாலும் வெளியிடுகின்றன.

இங்கே வளைத்து வளைத்து கேள்வி அங்கே கேள்வியே இல்லை

வாங்கலில் நடைபெற்ற சம்பவம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அதை தொடர்ப்புபடுத்தி திமுக என பரப்புகிறார்கள். இதற்கு முன்பு எங்கே இருந்தார் என பார்ப்பதில்லை. முன்பு அதிமுகவில் தான் இருந்தவர் இப்போது திமுகவில் இணைந்ததும் உடனே அந்த படத்தை எடுத்து பதிவு செய்கிறார்கள். அவர்கள் கட்சிலேயே இருந்திருந்தால் இப்படி செய்திருக்க மாட்டார்கள். நாங்கள் அப்படி அல்ல. சட்டத்துக்கு புறம்பாக செயல்பட்டவர்கள் மீது அரசும் காவல் துறையும் உரிய நடவடிக்கை எடுக்கிறது. திமுகவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வாங்கலில் நடைபெற்ற சம்பவத்தில் காவல்துறை உரிய விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். யாரும் வழக்கிலிருந்து தப்ப முடியாது.

பத்திரிகை ஊடகங்கள் சீர் தூக்கி பார்த்து வெளியிட வேண்டும். வாங்கல் சம்பவம் அரசியல் தொடர்பு என செய்தியாக்கப்படுகிறது. நான் ஒரு கருத்து சொன்னால் கூட சரியா தவறா என்று பார்த்து நீங்கள் எதிர் கேள்வி கேட்கலாம். அப்படி ஒரு சூழலை நீங்கள் உருவாக்குவதில்லை. நாமெல்லாம் பேட்டி கொடுத்தால் வளைத்து வளைத்து கேள்வி கேட்கப்படுகிறது. எவ்வளவு கேட்டாலும் பதில் சொல்கிறோம். ஆனால் மற்ற இடங்களில் கேள்வியே கேட்பதில்லை. அவர்கள் சொல்வதை அப்படியே வெளியிடுவதால் உண்மையைப் போல் சித்தரிக்கப்படுகிறது. அதற்கு நீங்கள் துணை போக வேண்டாம். இவ்வாறு செந்தில் பாலாஜி கூறினார்.

தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பொம்மிடி ஊராட்சி வாக்குசாவடி எண் 216 ல் சிறுபான்மையினர் மக்கள் வசிக்கும் பகுதி பள்ளிவாசலில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை பணி நடைபெற்றது. உடன் மாவட்ட வர்த்தகரணி அமைப்பாளர் தாமோதரன், ஒன்றிய கழக துணை செயலாளர் ஜாகிதாசெரீப், ஒன்றிய இளைஞரணி செயலாளர் சானவாஷ் மற்றும் நசீர், உமர், சையதுஅகமது, பாஷா பாய், நூருல்லா, முருகன், தயாளன், சித்திக், மயில், முரசொலி, ரஜினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - புதுச்சேரி - காரைக்கால் மாநில அமைப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

புதுச்சேரி – காரைக்கால் மாநிலம்

தலைவர் - எம். அந்தோணி ஜெயராஜ் 8, ஆர்.ஆர். கார்டன், பிளாட் எண். 15, எ.ஜெ. நகர், கோட்டுச்சேரி, காரைக்கால்.

துணைத் தலைவர் - அ. சலீம் பாட்ஷா 91, திட்டச்சேரி சாலை, திருப்பட்டினம், காரைக்கால்.

அமைப்பாளர் - **டி. முஹம்மது ஜாஹிர் ஹுசைன்** 3-2வது குறுக்குத் தெரு, ஹுசைன் நகர், காமராஜ் சாலை விரிவாக்கம், காரைக்கால்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. அன்புசெல்வம் 16, நடுத்தெரு, முப்பேத்தங்குடி, செல்லூர் அஞ்சல், தென்னங்குடி - திருநள்ளார், காரைக்கால். 2) எ.எம்.ஜ. முகமது தவ்பீக் 13, முதல் குறுக்குத் தெரு, எம்.எம்.ஜி. நகர், பி.கே. சாலை, காரைக்கால். 3) எ.ஆர். சுல்தான் அப்துல் காதர், 135, மெயின் ரோடு, கந்தன்குடி சாலை, அம்பகரத்தூர், காரைக்கால். 4) ஒய். முஹம்மது மர்ஜீக் 244/3, கரீம் நகர், புதுத்துறை, காரைக்கால். 5) எஸ். சூசைநாதன் 54, சாவடி தெரு, வடமட்டம், கோட்டுச்சேரி, காரைக்கால்.

"அண்ணா அறிவாலயம்"
நாள் : 16-07-2025.
சென்னை - 18.

டாக்டர் அ.சுபேர்கான்
செயலாளர்,
சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (15.07.2025) அன்று கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, நாமக்கல், சேலம், விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் புதுக்கோட்டை விஜயா தலைமையில், உறுப்பினர்கள் டாக்டர்.எம்.கசிமிர் ராஜ், ஸ்ரீ காவ்யா நாகராஜன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஹஃப்ஸா, சமூக நல அலுவலர் அம்பிகா, குழந்தை நலக்குழு உறுப்பினர், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர், நன்னடத்தை அலுவலர் மற்றும் காவல் துறை, பள்ளிக்கல்வித் துறை, அலுவலர் பலர் கலந்து கொண்டனர்.